# நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன இணைப்பு சேவை தொடக்கம்



சென்னை நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தில் சீருந்து இணைப்பு சேவை மற்றும் மின் ஊர்திகளுக்கு மின்னேற்றும் வசதிகளை திங்கள்கிழமை தொடங்கி வைத்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால்.

**சென்னை, ஆக.5:** சென்னை நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தில் புதிய வாகன இணைப்பு சேவை, மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றம் செய்யும் வசதி ஆகியவற்றை தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. புதிய வாகனங்களின் இணைப்பு சேவை, மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றம் செய்யும் வசதியை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் தலைமை வகித்தார். நிறுவனத்தின் இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ், ராஜீவ் நாராயன் திவேதி, எல். நரசிம் பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 45 கி.மீ. தொலைவில் இரண்டு வழித்தடங்களில் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மெட்ரோ ரயில் நிறுவனம் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இணைப்பு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பெங்களூரு மெகா கேப்ஸ் நிறுவனமும், மெட்ரோ ரயில் நிறுவனமும் இணைந்து அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் செயலி வழியாக சிறிய வாகன இணைப்பு சேவைகளை வழங்க உத்தேசித்துள்ளது. இதற்கான செயலி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து 6 முதல் 8 கி.மீ. தூரம் வரை செயல்படுத்தப்படும். மெட்ரோ ரயில் பயணிகளை மெட்ரோ நிலையங்களிலிருந்து ஏற்றிக்கொண்டு அவர்கள் சேருமிடங்களில் இறக்கி விடப்படுவர். இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கான ஒரே கட்டணம் ரூ.10. முதல் கட்டமாக சென்னை சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி. ஆயிரம் விளக்கு, ஏஜி-டி.எம்.எஸ். மற்றும் நந்தனம் ஆகிய மெட்ரோ நிலையங்களில் செயல்படுத்தப்படும்.

**மின்னேற்றம் செய்யும் வசதி:** மத்திய அரசின் நிறுவனமான எனர்ஜி எபிசியன்சி சேவை நிறுவனத்துடன் இணைந்து, மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றம் செய்யும் வசதி 26 மெட்ரோ ரயில் நிலையங்களின் வாகன நிறுத்துமிடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கமாக, நந்தனம் மெட்ரோ ரயில் வாகன நிறுத்துமிடத்தில் சிறிய வாகனத்துக்கு மின்னேற்றம் செய்யும் வசதி தொடங்கப்பட்டுள்ளது.